IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW5

Defense :

Name : ஞானவேல்

Father's Name : சண்முகம்

Village : சைதாப்பேட்டை

Taluk : ஆரணி

Caste :

Calling : தறி வேலை

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.01.2025.

**முதல் விசாரணை**

**1. எதிரி ஆஜர்.**

2. நான் தற்போது 13/A சுப்பிரமணி தெரு, சைதாப்பேட்டை ஆரணியில் குடியிருந்து வருகிறேன். தறி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 முதல் அ.சா4 வரையானவர்களை தெரியும். 2021 ம் வருடம் மார்ச் மாதம் தேதி நினைவில்லை நானும் வேலு என்பவரும் சைதாபேட்டையில் இருந்து வந்து கொண்டிருந்தோம். ஆரணி நகராட்சி அலுவலகம் வழியாக வந்து கொண்டிருந்தோம். நானும் வேலுவும் ஒரே இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். இருசக்கர வாகனத்தில் நான் பின்புறத்தில் அமா்ந்து வந்து கொண்டிருந்தேன் அப்போது வேலு சீட்டு எதிரி நடத்தி வந்தது சம்பந்தமாக பேசிகொண்டு வந்தாா்.

3. அந்த சமயம் நகராட்சி அலுவலகம் அருகில் நாங்கள் வந்து கொண்டு இருந்தபோது எதிரியும் வடுகசாத்தை சோந்த ஒரு நபரும் பேசிக்கொண்டிருந்தாா்கள். அவரது பெயா் எனக்கு தெரியாது. அந்த நபரை பாா்த்தால் தெரியும். அப்போது அவா்களுக்குள் பேச்சுவாா்த்தை முற்றிப்போய் எதிரி அருகில் இருந்த உருட்டு கட்டையை எடுத்து வடுகசாத்தை சோ்ந்த அந்த நபரை தலையில் அடிக்க முற்பட்டாா். அப்போது அந்த நபா் தலையை சாய்த்து கொண்டதால்

அவரின் தோல் பட்டையில் அடிபட்டது. உடனே அந்த நபர் மயக்கமாகிவிட்டார். எதிரி அடித்த கட்டையை கீழே போட்டு விட்டு அங்கிருந்து ஓடி விட்டார்.

4. உடனே வடுகசாத்தை சேர்ந்த அந்த நபரை இருசக்கர வாகனத்தில் நாங்கள் ஆரணி அரசு மருத்துவமனைக்கு அழைத்சென்று சேர்த்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. சைதாபேட்டையில் என் மாமாவிற்கு சொந்தமான கடையை நான் தான் எதிரிக்கு வாடகைக்கு பேசி அந்த கடையில் எதிரி சிமெண்ட் டீலர்சிப் எடுத்து வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு எந்த தேதியில் எதிரி அந்த கடையை துவங்கினார் என்றால் தேதி சரியாக நினைவில்லை. ஆனால் சம்பவத்திற்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் கடையை துவங்கினார். அந்த கடைக்கு முன்தொகையாக ரூ.1,50,000/- வாடகை ரூ.9,000/- பேசப்பட்டது.

2. அவ்வாறு அந்த கடையை எதிரி எந்த தேதி வரை நடத்தி வந்தார் என்று எந்த தேதி வரை வாடகை கொடுத்து வந்தார் என்றும் சொன்னால் தேதி எனக்கு நினைவில்லை. ஆனால் கடையை மூடுவதற்கு 6 மாதங்கள் முன்பிலிருந்து எதிரி வாடகையை கொடுக்கவில்லை. கடையை மூடிய பிறகு கடையின் சாவியை என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை சாவியை என் மாமாவிடம் கொடுத்தாரா என்றால் என் மாமா என்னிடம் அதுபற்றி சொல்லவில்லை. அதனால் எந்த தேதியில் எதிரி கடையை மூடினார் என்று யாரிடம் சாவியை கொடுத்தார் என்றும் தெரியாது என்றால் சரிதான். அவ்வாறு எதிரி வாடகை கொடுக்காதது சம்பந்தமாக கடை சாவியை கொடுக்காதது சம்பந்தமாக நானோ அல்லது என் மாமாவோ எதிரி மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது அந்த கடையின் யார் வாடகைக்கு இருந்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த கடைக்கம் என் வீட்டிற்கும் அரை கி.மீ தொலைவு இருக்கும். அந்த கடை கார்த்திகேயன் ரோடு இ.பி. அலுவலகம் எதிரில் உள்ளது. கடைக்கு கொடுத்த முன்தொகை பணத்தில் வாடகையை கழித்து மீதி தொகை எதிரிக்கு திருப்பி கொடுக்கப்பட்டதா என்றால் நான் கொடுக்கவில்லை என் மாமா கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது.

3. சம்பவத்தின் போது என் மாமா நெய்வேலியில் எல்.ஐ.சி யில் வேலை செய்து வந்தார் தற்போது என் மாமா சென்னையில் உள்ளார். நான் சொல்வது போல் எனக்கும் எதிரிக்கும் சீட்டு பாக்கி எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி அவர் வாடகைக்கு இருந்த கடையில் வைத்திருந்த 300க்கும் மேற்பட்ட சிமெண்ட் மூட்டைகளை சீட்டு பிரச்சனை ஏற்பட்ட உடன் கடையின் பூட்டை உடைத்து நான் திருடி சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எதுவும் நான் எடுக்கவில்லை.

4. எதிரி கொடுத்த வாடகை முன்தொகை கேட்பார் என்றும் நான் அவர் வாடகைக்கு இருந்த கடையில் இருந்து எடுத்து சென்ற சிமெண்ட் மூட்டைகளுக்கான பணத்தை கேட்பார் என்றும் அதனால் எதிரியை நிரந்தரமாக சிறையில் வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. காயம் பட்ட அ.சா.1 ஐ சம்பவம் நடந்த 5 நிமிடங்களில் அரசு மருத்துவமனையில் சேர்த்துவிட்டோம். அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் குறித்து அவரது பெயர் மற்றும் முகவரி குறித்தும் மருத்துவமனையில் வேலு சொன்னார். அ்.சா.1 பேச முடியவில்லை என்பதால் வேலு அந்த தகவல்களை சொன்னார்.

6. நகராட்சி அலுவலகம் உள்ள சாலை ஆரணி பிரதான சாலை அங்கு எப்போதும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். காயம் பட்ட நபரும் எதிரியும் அசிங்கமான வார்த்தைகள் கொண்டு மாறி மாறி திட்டிகொண்டார்கள் என்றால் எதிரி மட்டும் தான் அசிங்கமான வார்த்தைகள் பேசினார். சம்பவத்தை நான் ஆஞ்சிநேயர் கோவில் இருக்கும் பக்கத்தில் இருந்து நின்று பார்த்தேன். வேலு எந்த பக்கம் நின்றுகொண்டிருந்தார் என்று நான் கவனிக்கவில்லை. அங்கிருந்த மக்கள் கேட்டினை சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

7. எதிரி பணத்தினை ஏமாற்றி விட்டு ஊரை விட்டு காணாமல் போய்விட்டார் என்று சொல்லும் காலத்திலிருந்து எத்தனை நாட்கள் கழித்து சம்பவ தினத்தன்று எதிரியை நான் பார்த்தேன் என்றால் ஒரு மாதம் கழித்து நான் பார்த்தேன். எதிரியும் அ.சா.1 ம் பேசிக்கொண்டிருந்த போது நான் என் பணத்தை கேட்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நான் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தையும் சிமெண்ட் மூட்டையும் ஏமாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.